பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

19 08 2024 MONDAY 7.15 PM

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு நரேந்திர மோடி அரசுமுறைப்பயணமாக போலந்த் மற்றும் உக்ரைன் நாடுகளுக்கு நாளை மறுநாள் புறப்பட்டு செல்கிறார்.

- மகளிருக்கு எதிரான குற்றங்களை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்று மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

- மத்திய அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்வதில் தகவல் ஒலிபரப்புத்துறை முக்கிய பங்கு வகிப்பதாக அத்துறைக்கான இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

- மலேசிய பிரதமர் Dato Seri Anwar Bin Ibrahim மூன்று நாள் அரசு முறைப்பயணமாக இன்றிரவு புதுதில்லி வருகிறார்.

- 20 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து போட்டியில் இந்தியா 1-0 என்ற கோல் கணக்கில் பூட்டானை வென்றது.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி அரசு முறைப்பயணமாக போலந்து மற்றும் உக்ரைன் நாடுகளுக்கு செல்லவுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது. இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறையின் மேற்கு விவகாரங்களுக்கான செயலர் திரு Tanmaya Lal, முதல்கட்டமாக, பிரதமர் நாளை மறுநாள் போலந்து செல்வுள்ளதாக தெரிவித்தார்.

45 ஆண்டுகளுக்கு பிறகு இந்திய பிரதமர் அந்நாட்டிற்கு செல்ல உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இரண்டு நாட்கள் போலந்தில் தங்கியிருக்கும் பிரதமர், இதனைத்தொடர்ந்து, வரும் வெள்ளிக்கிழமை உக்ரைன் செல்லவுள்ளதாக அவர் கூறினார்.

உக்ரைன் அதிபர் திரு Volodymyr Zelenskyy –யின் அழைப்பை ஏற்று பிரதமர் இந்த பயணத்தை மேற்கொள்ள உள்ளதாக அவர் தெரிவித்தார்.

முப்பது ஆண்டுகளுக்கு பிறகு இந்திய பிரதமர் முதல் முறையாக உக்ரைன் செல்லவுள்ளதாகவும், இதன் காரணமாக இந்த பயணம் வரலாற்று சிறப்புமிக்கது என்றும் திரு Tanmaya Lal கூறினார்.

<<<<<<>>>>>>

நிதிசார் இணையதள குற்றங்களை தடுப்பதற்கு ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் அவசியமாகிறது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் பொதுத்துறை வங்கிகளின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

பொதுத்துறை வங்கிகள், அரசு மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்துடன் இணைந்து நிதிசார் இணையதள முறைகேடுகளை களைய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட திட்டங்களை செயல்படுத்த பொதுத்துறை வங்கிகள் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

மகளிருக்கு எதிரான குற்றங்களை ஒருபோதும் அனுமதிக்க இயலாது என்று மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கொல்கத்தாவில் பெண் பயிற்சி மருத்துவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் துரதிருஷ்டவசமானது என்று கூறினார்.

இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் திரு பியூஷ் கோயல் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

இதற்கிடையே, மகளிருக்கு உரிய பாதுகாப்பு வழங்க மேற்குவங்க அரசு தவறிவிட்டதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் செய்தித்தொடர்பாளர் திரு கவ்ரவ் பாட்டியா, சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்த மேற்குவங்க அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றார்.

கொல்கத்தாவில் பெண் பயிற்சி மருத்துவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில், இந்த சம்பவத்திற்கு உரிய நீதி கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்தி செவிலியர்கள் கொல்கத்தாவில் இன்று கண்டன பேரணியை நடத்தினர்.

இதில் இளம் பயிற்சி மருத்துவர்களும் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

மத்திய அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்வதில் தகவல் ஒலிபரப்புத்துறை முக்கிய பங்கு வகிப்பதாக அத்துறைக்கான இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் தமது துறையின் தென்மண்டல ஆய்வுக்கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னர், அகில இந்திய வானொலி வளாகத்தில் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

இளையோர் தொழில்நுட்பம் மற்றும் இணையதள விளையாட்டுகளை உருவாக்குவதற்கான பணிகளில் ஈடுபடுவதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி ஊக்கம் அளித்து வருவதாகவும் திரு எல். முருகன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

உலக சமஸ்கிருத தினம் இன்று கொண்டாடப்பட்டது.

இதனையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், சமஸ்கிருதத்தின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் பாடுபடும் அனைவருக்கும் வாழ்த்துகளை தெரிவித்துகொள்வதாக கூறியுள்ளார்.

இந்நாளையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

<<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான செயல் திட்டம் குறித்து ராணுவ தலைமை தளபதி ஜெனரல் உபேந்திர த்விவேதி தலைமையில் இன்று உயர்நிலைக்குழு கூட்டம் புதுதில்லியில் நடைபெற்றது.

அடுத்த 20 ஆண்டுகளில் ராணுவத்தில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்த நடவடிக்கைகள் குறித்து இதில் விவாதிக்கப்பட்டது.

ராணுவத்தில் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை அதிகரிப்பது குறித்தும் இதில் ஆலோசிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

வளரும் நாடுகளின் சுகாதார நிபுணர்கள் நான்கு நாள் அரசு முறைப்பயணமாக இந்தியா வந்துள்ளனர்.

வெளியுறவு அமைச்சகம் விடுத்த அழைப்பை ஏற்று 15 நாடுகளை சேர்ந்த 30 பேர் இந்த பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

இதற்கான தொடக்க விழாவை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா இன்று தொடங்கிவைத்தார்.

இந்த நிபுணர்கள் ஆக்ரா, ஹைதராபாத், ஆகிய பகுதிகளுக்கு சென்று மக்கள் மருந்தகங்கள் மற்றும் தடுப்பூசி உற்பத்தி பிரிவுகளையும், ஆராய்ச்சி கூடங்களையும் பார்வையிட உள்ளனர்.

<<<<<<>>>>>>

தெலங்கானாவில் இருந்து மாநிலங்களவை உறுப்பினரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் திரு அபிஷேக் மனு சிங்வி இன்று தமது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி மற்றும் அமைச்சர்கள் முன்னிலையில் அவர் வேட்புமனுவை தாக்கல் செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

மலேசிய பிரதமர் Dato Seri Anwar Bin Ibrahim மூன்று நாள் அரசு முறைப்பயணமாக இன்றிரவு புதுதில்லி வருகிறார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று அவர் இந்த பயணத்தை மேற்கொள்ள உள்ளதாக வெளியுறவு அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பிரதமர் திரு நரேந்திர மோடியுடன், மலேசிய பிரதமர் நாளை பேச்சு நடத்தவுள்ளார்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் ஆகியோரையும் மலேசிய பிரதமர் சந்தித்து பேசவுள்ளார்.

மலேசிய பிரதமராக திரு Anwar Bin Ibrahim பொறுப்பேற்ற பின்னர் இந்தியா வருவது இதுவே முதல் முறையாகும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

நேபாளத்தில் நேரிட்ட நிலச்சரிவில் நான்கு பேர் உயிரிழந்தனர்.

Bajhang மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதியில் நேரிட்ட இந்த நிலச்சரிவில் சிக்கிய ஆறு பேர் பாதுகாப்பாக மீட்டகப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

நிலச்சரிவு காரணமாக Gokuleshwar Khalanga வழித்தடத்தில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

நேற்றிரவு முதல் பெய்த கனமழையே நிலச்சரிவுக்கு காரணம் என்று காவல்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

<<<<<<>>>>>>

மணிப்பூரில் பெய்துவரும் கனமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இரண்டு இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

Imphal-லின் Jiribam சாலையில் நேரிட்ட நிலச்சரிவு காரணமாக அந்த வழிடத்தடத்தில் போக்குவரத்து பாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மணிப்பூரில் அடுத்த சில தினங்களுக்கு கனமழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளதால், உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அம்மாநில அரசு மேற்கொண்டு வருகிறது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்க உள்ளவர்களுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி காணொலி வாயிலாக இன்று கலந்துரையாடினார்.

தமிழகத்தை சேர்ந்த மாரியப்பன் தங்கவேலு உட்பட பலர் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

-----------------

20 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து போட்டியில் இந்தியா 1-0 என்ற கோல் கணக்கில் பூட்டானை வென்றது.

நேபாளின் லலித்பூரில் நடைபெற்ற இப்போட்டியின் 37-ஆவது நிமிடத்தில் இந்தியாவின் Monirul Molla கோல் அடித்தார்.

--------------

17 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டி ஜோர்டானின் Amman-ல் இன்று தொடங்கியது.

இந்தியாவின் சார்பில் Nishant Phogat உட்பட 29 பேர் இதில் பங்கேற்றுள்ளனர்.

------------------

Goodwill கோப்பைக்கான சர்வதேச பாரா துடுப்புப்படகு போட்டியில் இந்தியா இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

மாஸ்கோவில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் 500 மீட்டர் பிரிவில் Vinay Kumar Kush–யும், ஆடவர் 200 மீட்டர் பிரிவில் Krishnakumar Samana –வும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

--------------

ஸ்லோவேக்கியாவில் நடைபெற்ற சைக்கிள் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Harshveer Sekhon வெண்கலப்பதக்கம் வென்றார்.

ஆடவர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

--------------

இலங்கையில் நடைபெற்ற சர்வதேச ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Anahat Singh பட்டம் வென்றார்.

<<<<<<END>>>>>>